3rd November 1966]

உடைப்பு எடுத்தது பற்றி பொது மக்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கைகள் வந்தனவா?

**கனம் திரு. பூ. கக்கன்** : நீர் வரவுகால்களில் ஏற்பட்ட உடைப்புகள் சம்பந்தமாக, திருச்சிராப்பள்ளி கோட்ட நிர்வாகப் பொறியாளருக்கு ஒரு முறையீடு வந்தது. உடைப்புகளை அடைக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**திரு. பி. முருகையன்** : அந்தப் பகுதியில் இருக்கிற பொது மக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிற நோக்கில் அதிகாரிகளுடைய கவனக் குறைவினுல்தான் உடைப்பு ஏற்பட்டது என்று சொல்கிருர்கள். இனிமேலாவது இத்தகைய உடைப்புகள் ஏற்படாமல் இருக்க சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்** : அணையில் உடைப்பு ஏற்படவில்லை. அணையில் இருந்து போகிற வாய்க்கால்களில்தான் உடைப்பு. அதையும் செப்பனிட்டுவிட்டார்கள்.

**திரு. பி. முருகையன்** : அணைக்குப் பக்கத்தில்தான் உடைப்பு, அணையின் சிமிண்டு கட்டுகளை எல்லாம் உடைத்துக்கொண்டுபோய் இருக்கிறது. இனிமேலாவது அதிகாரிகளுடைய கவனக் குறைவினுல் இத்தகைய அசம்பாவிதம் ஏற்படாதிருக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : அணையில் உடைப்பு எதுவும் இல்லை. வாய்க்கால்களில் தான் உடைப்பு.

**திரு. கரு. சீமைச்சாமி** : அணையில் லேசாக உடைப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிருர்.

**கனம் திரு. பூ. கக்கன்** : அணை லேசாகவும் உடையவில்லை. பலமாகவும் உடையவில்லை. (சிரிப்பு)

### போலீஸ்

*366 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், போலீஸ் படையின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**The Hon. Sri P. KAKKAN** : (*a*) No.

(*b*) Does not arise.

**திரு. கரு. சீமைச்சாமி** : தமிழ்நாட்டில் உள்ள போலீஸ் படையின் எண்ணிக்கைக்கும் ஜனத்தொகையின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாச்சாரம் என்ன என்று அறியலாமா?

**கனம் திரு. பூ. கக்கன்** : அந்த விகிதாச்சாரம் பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்** : சமீபத்தில் வர இருக்கிற பொதுத் தேர்தலின்போது போலீஸ்காரர்கள் தேர்தல் பந்தோபஸ்து ட்யூட்டியில் ஈடுபட வேண்டியிருக்குமாதலால், அந்தச் சமயம் ஹோம் கார்டுகளைப் பயன்படுத்திக்கொள்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன்** : அரசாங்க உத்தேசம் அதுதான்.

**திரு. கரு. சீமைச்சாமி** : போலீஸ் ஸ்டேஷன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று எஸ்டிமேட் கமிட்டி ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா? அதன்மீது அரசாங்கம் பரிசிலனை செய்து எடுத்த முடிவு என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்** : ஏற்கனவே ஐ. ஜி. கேட்டிருந்தார்கள். இப்போது ஒன்றும் அதிகரிப்பதாக இல்லை.

**திரு. எஸ். மணி** : எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் நிறையப் பேர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் போலீசில் சேர விரும்புகிறார்கள். ஆகவே தற்சமயம் அதிக மாணவர்களைப் போலீசில் சேர்க்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் சபாநாயகர்** : அங்கே போய்ப் படிக்கப் போகிறார்களா? வேலை பார்க்கப் போகிறார்களா? (சிரிப்பு)

* 367 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்கெங்கு விசேஷ போலீஸ் (ரிஸர்வ் போலீஸ்) படைகள் அனுப்பப்பட்டன?

(இ) அவ்வாறு அனுப்பியதற்குக் காரணம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன்** : (அ) & (இ) 1965 டிசம்பரில் தஞ்சை மாவட்டத்தில் பின்வரும் இடங்களில் நிகழ்ந்த உழவர்கள் கிளர்ச்சி சம்பந்தமாகவும், ஏனைய சட்ட-ஒழுங்குச் சிக்கல்கள் சம்பந்தமாகவும் மலபார் சிறப்புப் போலீஸ் படைப்பிரிவுகள் அவ்விடங்களுக்கு அனுப்பப்பட்டன.

பொறையார், திருவாரூர், நாகப்பட்டினம், கீவளூர், மாயூரம், கூத்தநல்லூர், வேட்டைக்காரனிருப்பு, நன்னிலம் ஆனைக்காரன் சத்திரம்.

படைக்கலந்தாங்கிய ரிசர்வ் போலீஸ் படைப்பிரிவுகள் 1965 டிசம்பரில் வெள்ள இடர்தணிப்பு வேலைகள், பந்தோபஸ்து வேலைகள் முதலியவை சம்பந்தமாக கீழ்க்கண்ட இடங்களுக்கு அனுப்பப்பட்டன—

கரம்பை, அறந்தாங்கி, தஞ்சாவூர், கும்பகோணம்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : சார், விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி மிகவும் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. அதிகமாகக் கூலி கேட்கிறார்கள் என்பதற்காக மிராசுதார்கள் விசேஷப் போலீஸ்